தமிழ்ப் பல்கலைக்கழகச்

செய்தி மலர்

மலர்:7 திருவள்ளுவர் ஆண்டு 2020 - தை 1 - 14-1-'89 இதழ்:10

தமிழ்ப் பல்கலைக்கழக ஏழாம் ஆண்டு விழா



தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் ஏழாம் ஆண்டு விழா 3-1-'89 செவ்வாயன்று நடைபெற்றது. விழாவிற்குத் தலைமை தாங்கிய தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம் தம் தலைமை உரையில், தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகத்தில் தமிழ் அன்னையின் திருவுருவச் சிலை, பேரரசன் இராசராசன் மணி மண்டபம், கரிகால் பெருவளத்தான் மணி மண்டபம், தமிழக அரசு அன்பளிப்பாகக் கொடுத்த மகர தோரண வாயில், தத்துவமையக் கூடம், அறிவியல் ஆய்வுக்கட்டடம் ஆகியவற்றின் கால்கோள் விழா பற்றிக் குறிப்பிட்டதுடன், எழுத்திலக்கிய, படைப்பிலக்கிய, ஆய்வுத்துறை அறிஞர்களுக்குத் தமிழ்ப் பல்கலைக்கழக வேந்தர் மேதகு டாக்டர் பி. சி. அலெக்சாண்டர் அவர்கள் வழங்கவிருந்த பாராட்டு, பரிசு ஆகியவை பற்றியும் எடுத்துரைத்தார். அண்மையில் தாய்லாந்து சென்று முனைவர் பட்டம் பெற்றுத் திரும்பிய டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்களுக்குத் தமிழ்ப்பல்கலைக் கழகத்தின் பாராட்டு பற்றியும் கூறி அத்தனையையும் செய்த பல்கலைக்கழகத்தை வாழ்த்திய மேதகு ஆளுநர் அவர்களுடைய சிறப்பியல்புகளைப்பற்றிப் பேசிவரவேற்றார். பல்கலைக்கழக இணைவேந்தர் டாக்டர் ஏ. பத்மநாபன் அவர்களுடைய சிறப்புக்களையும் எடுத்துரைத்தார். அடுத்து, பரிசு பெற வந்திருந்த பெருமக்களையும் விழாவிற்கு வந்திருந்த அனைவரையும் வரவேற்றார்.

விழாவில் வாழ்த்துரை வழங்கிய மாண்புமிகு ஆலோசகர் டாக்டர் ஆ. பத்மநாபன் அவர்கள் தம் வாழ்த்துரையில், "இன்று ஒரு சரித்திரத்தையே படைக்கின்ற நாள் என்று சொல்ல வேண்டும். இரண்டாயிரம் ஆண்டுகளாகக் காலப் பழைமையும் கருத்துப் புதுமையும் கொண்டு என்றென்றுமே அழியாதிருக்கிற மொழியாக இருப்பதுதான் தமிழ்மொழி. தமிழை யாரும் அழிக்கமுடியாது. தமிழ் மக்களை யாரும் அழிக்க முடியாது.

இரண்டு நாடுகள் எல்லா வளத்தையும் பெற்று, இயல், இசை, நாடகம் என்ற நல்ல தொகுப்பைப் பெற்று உலக அரங்கிலே நல்ல சேவை செய்து வந்திருக்கின்றன. அவற்றில் ஒன்று தமிழ்நாடு. மற்றொன்று பிரான்ச். இரண்டாயிரம் ஆண்டுக்காலமாகப் பல சான்றோர்கள், அறிஞர்கள், எழுத்தாளர்கள் எல்லாம் அரிய படைப்புகளைக் கொடுத்துச்



சென்றுள்ளார்கள். அந்தப் படைப்புகளை எல்லாம்வைத்துக் கொண்டு, நாம் ஆய்வு செய்வதோடு, நாம் பல அரிய செய்திகளையும் தெரிந்து கொள்கிறோம். அவ்வாறு கொடுத்த பெரியவர்களுடைய படைப்புகளை எல்லாம் நினைவுகூரும் வகையில் இன்று தமிழ்நாட்டில், தமிழ் அறிஞர் பெருமக்களெல்லாம் பெரும் சேவை செய்துவருகிறார்கள். அம்மாதிரி சேவை செய்து வருகின்ற பட்டியலிலே இருப்ப வர்கள்தாம் இங்கே அமர்ந்திருக்கின்ற அறிஞர்கள், எழுத் தாளர்கள். இவர்களுடைய படைப்புகளுக்கெல்லாம் நாம் எல்லோரும் நன்றி சொல்லக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றோம்.

நாட்டில் அநேக பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. ஆனால் தமிழ்ப் படைப்புகளுக்கு, அப்படைப்புகளைத் தமிழ் மக்களுக்குக் கொடுத்த பெரியோர்களுக்கு, அறிஞர்களுக்கு, எழுத்தாளர்களுக்கு எல்லாம் ஊக்கம் அளிக்க வேண்டும்; ஊக்கம் அளிப்பது மட்டுமல்ல; இதற்காகத் தனியாக இம் மாதிரி ஒரு கூட்டத்தைக் கூட்டி மக்கள் மத்தியிலே அவர் களுக்குப் பாராட்டுதலையும் அளிக்க வேண்டும் என்ற பெரிய சிந்தனையைக் கொடுத்தவர் நம்முடைய மேதகு ஆளுநர் அவர்கள் என்பதை இங்கே நான் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

இந்தப் பல்கலைக்கழகத்தை, உலகத்திலே இருக்கின்ற ஒரு பெரிய நல்ல பல்கலைக்கழகமாக்க வேண்டுமென்று அடிக்கடி துணைவேந்தர் டாக்டர் ச. அகத்தியலிங்கம்அவர் கள் பணம் கேட்பது மட்டுமல்ல; பல நேரங்களில் கருத் துக்களையும்கேட்டார்கள், கேட்கிறார்கள்" என்று கூறினார்.

மேதகு ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர் கள் பரிசுகள் வழங்கி ஆண்டுவிழாப் பேருரை நிகழ்த்துகை யில்,

'நான் இளைஞனாக இருந்த காலத்திலேயே தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றின் ஆழம், கம்பீரம் ஆகியவற்றால் கவரப்பட்டேன். நான் என் ஆய்வுக்காகச் சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய நூல்களை மொழி பெயர்ப்பாளர்களின் துணைகொண்டு நன்கு கற்றேன். அந்த அனுபவம்தான் என்னைத் தமிழ்மொழி, தமிழ்ப் பண்பாடு ஆகியவற்றின் மீது அளவு கடந்த ஈடுபாடு கொள்ளுமாறு செய்தது. நான் தமிழ் மொழியிலே புலமையுடையவ னல்லன். ஆனால் புலமையுடையவர்கள் மட்டுமன்றி, தமிழ் மொழி மீது பக்தி கொண்டவர்களும் தமிழ் மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டுக்கும் தங்கள் சேவையைச் செய்யமுடியும். அந்த வகையிலே நான் தமிழ் மொழிக்கும், பண்பாட்டுக் கும் என்னலாலியன்ற பணியைச் செய்வேன். முதலில் பரிசு பெற்றவர்களுக்கு என் பாராட்டுகளைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

நான் தஞ்சைக்கு வருவதை ஓர் உரிமையாகவும், ஒரு பண்பாட்டு அனுபவமாகவும் கருதுகிறேன். நான் தென் இந்திய வரலாற்றையும் தமிழக வரலாற்றையும் நன்கு கற்றவன். அதனால் தஞ்சையின் வரலாற்றுச் சிறப்பையும் இங்குப் பேரரசர்கள் ஆட்சி செய்ததையும் அறிவேன். சோழப் பேரரசின் தலைநகராக விளங்கிய தஞ்சாவூரின் பெயர் இந்தியாவின் மூலை முடுக்குகளிலெல்லாம் அறியப் பட்டிருந்தது மட்டுமன்றி, கடல் கடந்தும் இதன் புகழ் பரவியிருந்தது. கோயில்களும், நாட்டியமும், இசையும், ஓவியமும், சிற்பமும், சீர்மிகு கட்டடங்களும் சிறந்து விளங்குவது தஞ்சைத் தரணி. தஞ்சை மண்ணில் தமிழ்ப் பண் பாட்டின் எல்லாத் துறைகளும் ஏற்றம் பெற்று விளங்கின. இத்தனை நூற்றாண்டுகளுக்குப் பின்னரும் இங்குள்ள மக்கள் தம் பழம்பெருமையைப் பேணிக்காத்து வருகின்றனர்.

தமிழ்நாட்டிலும், ஏன், தென்னிந்தியா முழுவதும் ஆல யங்கள் வெறும் வழிபாட்டிடங்களாக மட்டும் விளங்க வில்லை. அவை, கலையும் பண்பாடும் வளரும் இடங்க ளாக விளங்கின. இசையும் நாட்டியமும் இங்குத் தெய் வீகக் கலைகளாகக் கருதப்படுகின்றன. இந்துக்கள் கட

வுளையே நாதப் பிரம்மமாக, இசை வடிவாகக் காண்கின்றனர். அச்சிறப்பு காக்கப்பட வேண்டும் என்பது என் கருத்து.

நான் தமிழ்ப் பல்கலைக்கழகத்தை அதன் புதுமையான ஆய்வுத் திட்டங்களுக்காகப் பாராட்டுகிறேன். நான் இப்பல்கலைக்கழகம் செய்துவரும் சில ஆய்வுப் பணிகளைக் கண்டு மகிழ்ச்சியடைகிறேன். குறிப்பாக, சமுதாய வரலாறு, தென்னிந்தியத் துறைமுக வரலாறு, தமிழ் இலக்கணம், தமிழ் அகராதி, நாடகக் கலைக்களஞ்சியம், முனைவர் பட்ட ஆய்வேடுகளின் தொகுப்பு ஆகிய திட்டங்களுக்காக இப்பல்கலைக்கழகத் துணைவேந்தரைப் பாராட்டுகிறேன்.

இப் பல்கலைக்கழகம் தமிழ் மொழி பயிற்றுதலை இந்தியாவில் மட்டுமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் பரப்ப வேண்டும். அல்லயன்ஸ் பிரான்கைஸ், பிரெஞ்சு மொழியைப் பரப்புதல் போலவும், மாக்ஸ் முல்லர் நிறுவனங்கள் செர்மன் மொழியைப் பரப்புதல் போலவும், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் தமிழ் மொழியையும், தமிழ்ப் பண்பாட்டையும் ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் பரப்பவும் வளர்க்கவும் பாடுபட வேண்டும்' என்று கூறினார்.

தமிழ்ப் பல்கலைக்கழகப் பதிவாளர் டாக்டர் பெ. சின்னையன் நன்றிகூற விழா இனிது முடிந்தது.



அதன்பின் தமிழ்ப் பல்கலைக்கழக ஆய்வாளர் செல்வி வடிவுதேவியின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

ஆண்டுவிழாவையொட்டி 2-1-'89 இரவு 7 மணிக்கு டாக்டர் மதுரை சோமசுந்தரம் இசைநிகழ்ச்சி நடைபெற்றது.

நேரு நூற்றாண்டு வாழ்க — நாற்பதாவது இந்திய சுதந்திர தின வாழ்க

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் சார்பில் நேரு நூற்றாண்டு விழாவும் நாற்பதாவது இந்திய சுதந்திர தின விழாவும் 21-12-'88 புதன்கிழமை காலை 10 மணி அளவில் அரண்மனை வளாகக் கருத்தரங்கு அறையில் நடைபெற்றன.

தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் முனைவர் ச. அகத்தியலிங்கம் தம் தொடக்கவுரையில், 'ஆசிரிய சக்தி ஓர் அசுர சக்தி. அரசியலில் ஏற்பட்ட மாற்றம் ஆசிரியர்களால் ஏற்பட்டதுதான்!' என்று குறிப்பிட்டார். அவர் மேலும் பேசுகையில் சட்டத்தைப்பற்றிப் பிற நாடுகள் சிந்திக்காத காலத்திலேயே மனுநீதியைத் தந்த நாடு — இந்நாடு. திருக்குறளில் படை, குடி, கூழ், அமைச்சு போன்ற தலைப்புகளில் உள்ள குறட்பாக்கள் மன்னன் எப்படி இருக்க வேண்டும், நாடு எப்படி இருக்க வேண்டும், குடிமக்கள் எப்படி இருக்க வேண்டும் என்ற செய்திகளையெல்லாம் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே அறிவிக்கின்றன எனக் குறிப்பிட்டார்.

சட்டமும் சமுதாய மாறுதலும் என்னும் தலைப்பில் ஒரு நாள் கருத்தரங்கு நடைபெற்றது. இக்கருத்தரங்கில் பல அரிய கட்டுரைகள் பேராசிரியர்களால் படிக்கப்பட்டன. பல கல்லூரிகளிலிருந்தும் பேராசிரியர்களும் மாணவர்களும் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

தமிழ்ப் பல்கலைக்கழகச்
செய்தி மலர்
திங்களிதழ்
பதிவெண் 15033/8227

தமிழ்ப் பல்கலைக்கழகம்
தஞ்சாவூர் - 613 001.
தமிழ்நாடு - இந்தியா

இ.அ.அ. மட்டும்.

37) நிருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக்கழகப் புதிய வெளியீடுகள்

1. வாழ்வியற் களஞ்சியம் - தொகுதி ஆறு

ஏகாம்பரநாதர் உலா முதல் கனோபிக்குச் சாடிகள் ஈறாக உள்ள பல்வேறு தலைப்புகளில் செய்திகள் விளக்கப்பட்டுள்ளன. நூல் நிலையங்களிலும் அறிஞர் பெருமக்கள் இல்லங்களிலும் இடம்பெற வேண்டிய அறிவுக் களஞ்சியம்.

பக்கங்கள்: 1018 விலை: உரு. 300/-

2. வியாசரும் வில்லியும் ஒரு திறனாய்வு

ஆசிரியர்: ச.கு. கணபதி

வடமொழியில் வியாசர் இயற்றிய மகாபாரத மூலநூலையும் தமிழ்மொழியில் வில்லிபுத்தூரார் இயற்றிய பாரத வழிநூலையும் ஒப்பிட்டு ஆய்வு செய்து வியத்தகு செய்திகளை ஆசிரியர் வழங்குகிறார். படித்துச் சுவைக்கத் தகுந்த நூல் இது.

பக்கங்கள்: 247 விலை: உரு. 24/-

3. நுண்ணலகுகளும் இராகங்களும்

ஆசிரியர்: து.ஆ. தனபாண்டியன்

இராகங்களில் என்னென்ன சுரங்கள் நுண்ணலகுடன் (நுட்பச் சுருதியுடன்) வருகின்றன; அவற்றின் அளவுகள் என்ன என்பவற்றைத் திட்டவட்டமாக அறிவிக்கும் நூல் இது. நம் இசையின் இனிமையும் சிறப்பும் இந்த நுண்ணலகுகளில்தான் உள்ளன. இந்நுண்ணலகுகளில் ஒலித் துடிப்புகள் படங்கள் மூலமும் விளக்கப்பட்டு உள்ளன. இசைக் கலைஞர்கட்கு இந்நூல் ஒரு கருவூலம்.

பக்கங்கள்: 378 விலை: உரு. 50/-

4. மூவர் திருமுறைப்பாடல்கள்

தொகுப்பாசிரியர்கள்: பேரா. து.ஆ. தனபாண்டியன்
திருமதி ஞானா குலேந்திரன்
செல்வி பி.எஸ். லோச்சன்

இதுவரை சுர, தாளக் குறிப்புகளோடு வெளிவராத மூவர் அருளிய எழுபத்தைந்து தேவாரப் பாடல்களுக்கு உரிய சுர, தாளக் குறிப்புகளை இந்நூல் விளக்குகிறது. தமிழிசை மரபு பாதுகாக்கப்பட வேண்டும் என்ற பெருநோக்கோடு உருவானது. இசைப் பேரறிஞர்களின் பெருமுயற்சியில் தோன்றிய இந்நூல் இசைபயிலும் மாணாக்கர்கட்கும் இசை ஆய்வாளர்கட்கும் பயன்படுவது. ஓதுவாமூர்த்திகளின் படங்கள் கொண்டது.

பக்கங்கள்: 132 விலை: உரு. 20/-

5. குழந்தைகளுக்குக் காந்தி

ஆசிரியர்: திருமதி அரோமா குளோரிசாம்

பக்கங்கள்: 72 விலை: உரு. 10/-

6. சிறுவர்களுக்கு நேரு

ஆசிரியர்: பா. சுப்பிரமணியம்

பக்கங்கள்: 43 விலை: உரு. 5/-

உறுப்பினர் கட்டண விவரம்

செய்திமலர் / நியூஸ் புல்லட்டின்

ஓராண்டு	உரு. 5/-	$ 4
ஈராண்டு	உரு. 10/-	$ 8
மூவாண்டு	உரு. 12/-	$ 10

தமிழ்க் கலை / தமிழ் சிவிலிசேசன்

தனியிதழ்	உரு. 15/-	$ 3
2 இணைப்பிதழ்	உரு. 30/-	$ 6
ஓராண்டு	உரு. 60/-	$ 15
ஐந்தாண்டு	உரு. 240/-	$ 60

களஞ்சிய வெளியீடுகள்

அறிவியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு. 300/-
" "	தொகுதி-2	உரு. 300/-
" "	தொகுதி-3	உரு. 300/-
வாழ்வியற் களஞ்சியம்	தொகுதி-1	உரு. 300/-
" "	தொகுதி-2	உரு. 300/-
" "	தொகுதி-3	உரு. 300/-
" "	தொகுதி-4	உரு. 300/-
" "	தொகுதி-5	உரு. 300/-
" "	தொகுதி-6	உரு. 300/-
சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்	தொகுதி-1	உரு. 250/-
" "	தொகுதி-2	உரு. 250/-

கழிவு: 25% அஞ்சற் செலவு தனி

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக்கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர் - 613 001